# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2415/59 - 2024 දෙසැම්බර් මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.12.19

*2415/59 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**சனாதிபதியின் பணிப்புரை**

முத்திரை

*அநுர குமார திசாநாயக்க*

"Clean Sri Lanka" நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிட்டு, நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சனாதிபதி செயலணியொன்றைத் தாபித்தல்.

1. கலாநிதி என். எஸ். குமாநாயக்க அவர்கள்
   சனாதிபதியின் செயலாளர்
2. இராணுவத் தளபதி
3. கடற்படைத் தளபதி
4. விமானப்படைத் தளபதி
5. திரு. டப்ளிவ். எல். ஏ. சமன் பிரியந்த அவர்கள்
   பதில் பொலிஸ்மா அதிபர்
6. பொறியியலாளர் குமுது லால் டி சில்வா அவர்கள்
   தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபை
7. ஐ. எஸ். ஜயரத்ன அவர்கள்
8. கிஹான் டி சில்வா அவர்கள்
9. சந்தியா சல்காது அவர்கள்
10. கலாநிதி காமினி பட்டுவிடகே அவர்கள்
11. கலாநிதி அனுருத்த கமகே அவர்கள்
12. தில்ருக் வனசிங்ஹ அவர்கள்


1A - G 43320 — 364 (2024/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

13. தீபால் சூரியாரச்சி அவர்கள்
14. சிசிர அமரபந்து அவர்கள்
15. கிரிஷாந்த குரே அவர்கள்
16. ஜயது பெரேரா அவர்கள்
17. ருவன் வீரசூரிய அவர்கள்
18. தயான் கருணாரத்ன அவர்கள்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள்!

இலங்கை, பொருளாதார ரீதியில் மட்டுமன்றி அரசியல், சமூக, கலாசார மற்றும் ஒழுக்க ரீதியிலும் பின்தங்கிய நிலைக்கு ஆளாகியமையால் இலங்கைச் சமூகம் அதன் மூலம் பாதிக்கப்பட்ட ஒரு சமூகமாக மாறியுள்ளதனால், இதுவரை அனுபவித்து வரும் நிலைமையை மாற்றி நாட்டைப் புதியதொரு எழுச்சிக்கு இட்டுச்செல்ல வேண்டும் என்ற மக்களின் அபிலாஷை கடந்த தேர்தல் முடிவுகளின் போது தெளிவாகப் பிரதிபலித்தமையினாலும்;

முன்மாதிரியினை வழங்குதல், ஊக்குவித்தல், வழிகாட்டுதல் மற்றும் மாற்றத்திற்கான தேவைப்பாட்டை வலுவாக உறுதிப்படுத்துவதன் மூலம் சமூகத்தின் நடத்தை ரீதியான மாற்றங்களை மேற்கொள்வதற்கான அணுக்கத்தினைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதால், அதன் மூலம் சமூகத்தை முன்னேற்றத்தைநோக்கி கொண்டுசெல்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கான தேவை அரசால் இனம் காணப்பட்டுள்ளதாலும்;

குறித்த மாற்றங்களின் ஊடாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் தீர்க்கமான ஒரு தாக்கம் விளைவிக்கப்படும் என அரசு நம்புவதனாலும்;

“வளமான நாடு அழகான வாழ்க்கை” எனும் தொலைநோக்கிற்கு அமைவாக, இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வு, நல்லிணக்கம் மற்றும் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் மாற்றத்திற்கான ஒரு முயற்சி மற்றும் அதன் சமூக, சூழல் மற்றும் ஒழுக்கவியல் எழுச்சி ஆகியவற்றை இலக்காகக் கொண்டு தேசிய செயற்பாடொன்றை நடைமுறைப்படுத்தும் தேவை காணப்படுவதாலும்;

சூழல், பொருளாதாரம், சமூக உறுதிப்பாடு மற்றும் அரச பொறிமுறையை பலப்படுத்துவதற்காக மாற்றத்திற்கான ஒரு முயற்சி தேவை என்பதுடன் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு தற்போதைய அரசிடம் தார்மீக பொறுப்பு ஒன்று ஒப்படைக்கப்பட்டுள்ளதனாலும்;

குறித்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக 2024, திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது “Clean Sri Lanka” நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சனாதிபதி செயலணியொன்று தாபிக்கப்பட வேண்டியதன் தேவைப்பாடு இனம் காணப்பட்டுள்ளதாலும்;

எனவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், “Clean Sri Lanka” நிகழ்ச்சித்திட்டத்தைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கான சனாதிபதி செயலணியை இத்தால் தாபிப்பதுடன், தங்கள் அனைவருடைய விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும்கொண்டு, மேற்சொல்லப்பட்ட உங்களை, அதாவது,

1. கலாநிதி என். எஸ். குமாநாயக்க அவர்கள்
 சனாதிபதியின் செயலாளர்
2. இராணுவத் தளபதி
3. கடற்படைத் தளபதி
4. விமானப்படைத் தளபதி
5. திரு. டப்ளிவ். எல். ஏ. சமன் பிரியந்த அவர்கள்
 பதில் பொலிஸ்மா அதிபர்
6. பொறியியலாளர் குமுது லால் டி சில்வா அவர்கள்
 தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபை
7. ஐ. எஸ். ஜயரத்ன அவர்கள்
8. கிஹான் டி சில்வா அவர்கள்

9. சந்தியா சல்காது அவர்கள்
10. கலாநிதி காமினி பட்டுவிடகே அவர்கள்
11. கலாநிதி அனுருத்த கமகே அவர்கள்
12. தில்ருக் வனசிங்ஹ அவர்கள்
13. தீபால் சூரியாரச்சி அவர்கள்
14. சிசிர அமரபந்து அவர்கள்
15. கிரிஷாந்த குரே அவர்கள்
16. ஜயது பெரேரா அவர்கள்
17. ருவன் வீரசூரிய அவர்கள்
18. தயான் கருணாரத்ன அவர்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு மற்றும் ஏனைய எழுதப்பட்ட சட்டங்களில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ், கீழ் குறிப்பிடப்படும் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்குறித்த சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக நியமிக்கின்றேன்.

குறித்த பணிகளாவன;

i. சமூக, கலாசார மற்றும் ஒழுக்கவியல் எழுச்சி மூலம் சமூகத்தை, மிகவும் அபிவிருத்தியடைந்த நிலைமைக்கு உயர்த்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக "Clean Sri Lanka" நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடல், வழிநடத்தல், நடைமுறைப்படுத்தல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் உரிய கால எல்லையொன்றுக்குள் பூர்த்தி செய்தல்.

ii. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் அமைப்புக் கட்டமைப்பு ஒன்றை தயாரித்தல்.

iii. "Clean Sri Lanka" நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பில் அறிவுடைய அறிஞர்கள், தொழில்வாண்மையாளர்கள், விசேட நிபுணர்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் விடயம் சார்ந்த அறிவு மற்றும் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல்.

iv. அரச மற்றும் பகுதியளவு அரசதுறை, தனியார்துறை, ஆராய்ச்சி நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்தி தரப்பினர்கள், ஆலோசகர்கள் மற்றும் தொழிசார் அமைப்புக்கள், சமூகம் மற்றும் மக்கள் அமைப்புக்கள், வெகுசன ஊடக மற்றும் தொடர்பாடல் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், மதர்தியான அமைப்புக்கள், தொழிநுட்பம் வழங்குனர்கள் மற்றும் புத்தாக்குனர்கள், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தோர் போன்ற தரப்பினர்களை இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக இணைத்துக்கொள்ளும் கட்டமைப்பு ஒன்றை தயாரித்தல்.

v. "Clean Sri Lanka" நிதியத்திற்கான நிதி வழங்குதல் மற்றும் தேவைக்கு ஏற்றவாறு "Clean Sri Lanka" நிதியத்தைப் பயன்படுத்துதல் தொடர்பில் ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குதல்.

vi. இந்நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக அரச நிறுவனங்கள், தனியார் துறை, சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் போன்ற பல்வேறு தரப்பினர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை இனம் காணல் மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை "Clean Sri Lanka" நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைத்தல்.

vii. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுபேறுகளின் நிலைபேறான தன்மையை உறுதிசெய்வதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளை இனம் காணல், வகுத்தல் மற்றும் அத்தகைய சட்டங்களை நீண்டகாலத்திற்கு செயல்வலுப்படுத்தும் பொறுப்பை ஒப்படைக்கும் நிறுவன ரீதியான சட்டகமொன்றைத் தாபித்தல்.

viii. நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடல், வழிநடாத்தல், நடைமுறைப்படுத்தல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் நிலைபேறானதாக பேணிச் செல்வதற்காக டிஜிட்டல்மயப்படுத்தலைப் பயன்படுத்தல்.

ix. அனைத்து தரப்பினர்களையும் சாத்தியமான முறையில் ஊக்குவித்தல் மற்றும் தொடர்புபடுத்துவதற்காக பல்வகை தொடர்பாடல் மூலோபாயம் ஒன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

மேலும், மேற்குறித்த சனாதிபதி செயலணியின் தலைவராக சனாதிபதியின் செயலாளர் கலாநிதி என்.எஸ். குமாநாயக்க அவர்களையும், அந்த செயலணியின் அழைப்பாளர்/ செயலாளராக சனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஜீ. எம். ஆர். டீ. அபொன்சு அவர்களையும் நியமிக்கின்றேன்.

மேலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு மற்றும் ஏனைய எழுதப்பட்ட சட்டங்களில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ், இத்தால் ஒப்படைக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையானவாறு விடயங்களை விசாரிப்பதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும், சனாதிபதி செயலணி கருதும் அரச உத்தியோகத்தர்களின் உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கும், சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாகிய உங்களுக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்

மேலும், அந்த சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாகிய நீங்கள் மேற்குறித்த பணிகளை நிறைவேற்றல் தொடர்பில் அவ்வப்போது எனக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்துநான்காம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் கொழும்பில் அளிக்கப்பட்டது.

கௌரவ சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

கலாநிதி **என். எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

EOG 12-0201

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.